# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

**அறிவிக்கை எண். 26/2012** **நாள்: 09.07 .2012**

பின்வரும் பதவிக்கான காலிப்பணியிடங்களில் நேரடி நியமனம் செய்வதற்கான எழுத்துத் தேர்விற்கு 10.08.2012 அன்று வரை இணைய வழி மூலம் மட்டும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| **பதவியின் பெயர் மற்றும் பதவிக் குறியீட்டு எண்** | **பணியின் பெயர் மற்றும் குறியீட்டு எண்** | **காலிப் பணி இடங்களின் எண்ணிக்கை** | **சம்பள ஏற்ற முறை** |
|---|---|---|---|
| **கிராம நிர்வாக அலுவலர் (2012-2013)** (பதவிக் குறியீட்டு எண்.2025) | தமிழ்நாடு அமைச்சுப் பணி (குறியீட்டு எண் 050) | 1870* | ரூ. 5,200-20,200 + 2,400/- தர ஊதியம் (ச.ப. 1) |

*** இந்த காலிப்பணியிடங்களுக்கான தெரிவு, பணியாளர் குழுவின் ஒப்புதல் பெறப்பட்ட பின்னரே மேற்கொள்ளப்படும். மேலும் இந்த காலிப்பணியிடங்களைப் பொறுத்தவரை மாவட்டங்களுக்கான பணி ஒதுக்கீடு படிப்படியாக மேற்கொள்ளப்படும்.**

மாவட்ட வாரியான காலிப்பணியிடங்கள் இவ்வறிவிக்கையின் பிற்சேர்க்கை - I ல் காண்பிக்கப்பட்டுள்ளது.

## 2. முக்கிய தேதிகள்:-

| | | | |
|---|---|---|---|
| அ | அறிவிக்கை நாள் | 09.07.2012 | - |
| ஆ | விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் | 10.08.2012 | - |
| இ | வங்கி அல்லது அஞ்சலகங்கள் மூலம் கட்டணம் செலுத்துவதற்கான கடைசி நாள் | 14.08.2012 | - |
| ஈ. | தேர்வு நடைபெறும் நாள் மற்றும் நேரம் | 30.09.2012 முற்பகல் | முற்பகல் 10.00 மணி முதல் பிற்பகல் 01.00 மணிவரை |

## 3. <u>தகுதிகள்</u> :- (அ) வயது (01.07.2012 அன்று)

| **வ.எண்** | **விண்ணப்பதாரர்களின் இன வகைகள்** | **குறைந்த பட்ச வயது (முடிவடைந்திருக்க வேண்டும்.)** | **அதிகபட்ச வயது (முடிவடைந்திருக்கக் கூடாது)** |
|---|---|---|---|
| 1. | ஆ.தி., ஆ.தி(அ), ப.ப., மி.பி.வ. / சீ.ம., பி.வ., பி.வ.(மு) மற்றும் அனைத்து வகுப்புகளையும் சார்ந்த ஆதரவற்ற விதவைகள் | 21 வயது | 40 வயது |
| 2. | "ஏனையோர்" (அதாவது ஆ.தி.,ஆதி(அ)., ப.ப., மி.பி.வ/சீ.ம., பி.வ., மற்றும் பி.வ(மு) ஆகிய வகுப்பினைச் சாராதவர்கள்) | 21 வயது | 30 வயது |

**குறிப்பு :-**

I. தேர்வாணையத்தின் விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகளில் பத்தி 4ல் உள்ளவை இத்தெரிவிற்குப் பொருந்தாது.

II. தேர்வாணையத்தின் 'விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள்' பத்தி 13 மற்றும் 14ல் அறிவிக்கப்பட்டுள்ள வயது வரம்புச் சலுகை உச்ச வயது வரம்பிற்கு மட்டும் பொருந்தும்.

III. மாநில/மத்திய அரசில் முறையாக (Regular) ஐந்தாண்டுகள் பணிபுரிந்து, இப்பதவிக்குரிய வயது வரம்பிற்குள் இருந்தாலும், 'ஏனையோர்' *(ஆ.தி., ஆ.தி.(அ), ப.ப., மி.பி.வ. / சீம., பி.வ. மற்றும் பி.வ. (மு) தவிர)* இப்பதவிக்கு விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்கள் ஆவார்கள்.

IV. டான்சி நிறுவனத்தில் பணிபுரிந்து ஆட்குறைப்புக்குள்ளான தொழில்நுட்பத் தகுதியுள்ள மற்றும் தொழில்நுட்பத் தகுதியில்லாத பணியாளர்கள் / அரசு / கழகங்கள் மற்றும் அரசின் ஆளுகைக்குட்பட்ட நிறுவனங்களில் இதுவரை பணியிலமர்த்தப்படாமலிருப்பவர்கள் இப்பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட வயது வரம்பு தவிர எல்லா தகுதிகளும் இருக்கும் பட்சத்தில் இவ்வறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள பதவிக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவார்கள். தெரிவுக்கு வருபவர்கள் பொருட்டு விதிமுறைகளில் உள்ள வயது வரம்பு அரசால் தளர்த்தப்படும்.

**(ஆ) கல்வித் தகுதி:-**

09.07.2012 அன்று விண்ணப்பதாரர்கள் கீழ்குறிப்பிட்ட அல்லது அதற்கு சமமான கல்வித் தகுதியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

குறைந்தபட்ச பொதுக் கல்வித் தகுதி அதாவது பள்ளியிறுதி வகுப்பில் (பத்தாம் வகுப்பு) அல்லது அதற்குச் சமமான கல்வித் தகுதியில் தேர்ச்சி பெற்று மேல்நிலைப்பள்ளிக் கல்வி அல்லது கல்லூரிக் கல்வி படிப்பில் சேர்வதற்கான தகுதி பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு:-** பள்ளியிறுதி வகுப்பு (பத்தாம் வகுப்பு) அல்லது அதற்குச் சமமான கல்வித்தகுதியில் தேர்ச்சி பெறாதவர்கள் அதற்கு மேம்பட்ட கல்வித்தகுதி பெற்றிருப்பினும் விண்ணப்பிக்க தகுதியற்றவர்களாவர்.

**(இ) தமிழ் மொழியில் தகுதி :-**

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் போதுமான தமிழறிவு பெற்றிருக்க வேண்டும் (மேலும் விபரங்களுக்கு தேர்வாணையத்தின் பணி வேட்பாளர்களுக்கான விதி முறைகள் பத்தி 10-ஐ க்காண்க)

**4. பொது விவரங்கள் :-**

அ. கிராம நிர்வாக அலுவலர் பதவிக்கு நியமன இட ஒதுக்கீட்டு விதி மாவட்ட வாரியாக பின்பற்றப்படும். மாவட்ட வாரியான காலிப்பணியிட பகிர்வு, நடைமுறையில் உள்ள விதிகளின்படி பின்னர் அறிவிக்கப்படும்.

ஆ. அரசு ஆணை (நிலை) எண்.145, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (எஸ்) துறை, நாள் 30.09.2010 ல் நேரடி நியமனத்தில் அனைத்து காலிப் பணியிடங்களில் 20% (சதவீதத்தை) நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதியினை தமிழ்வழியில் படித்தவர்களைக் கொண்டு முன்னுரிமை வரிசையில் நிரப்ப அரசு ஆணையிட்டுள்ளது. **தமிழ் வழியில் படித்தவர்களுக்கான முன்னுரிமை** அடிப்படையிலான 20% இடஒதுக்கீடு விதி இத்தெரிவிற்கு பொருந்தும்.

இ அறிவிக்கப்பட்டுள்ள காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை தோராயமானதாகும். தெரிவு நடைபெறுவதற்கு முன்புவரை காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை மாறுதலுக்குட்பட்டதாகும்.

ஈ. தெரிவு செய்யப்பட தேர்ச்சியும் தகுதியும் வாய்ந்த பெண் விண்ணப்பதாரர்கள் கிடைக்கப் பெறாவிடில் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட காலிப்பணியிடங்கள் அதே வகுப்பைச் சார்ந்த ஆண் விண்ணப்பதாரர்களைக் கொண்டு நிரப்பப்படும்.

உ. அரசு ஆணை (டி) எண். 5 வருவாய் (பணி 7-1) துறை, நாள் 08.01.2007ன்படி மாற்றுத்திறனாளிகளில் 40% முதல் 50% வரை கை, கால் (Orthopaedically Handicpped) இயக்கத்தில் குறை உள்ளவர்களில், எழுதுவதில் எந்த விதத் தடையுமில்லாதவர்கள் மற்றும் உடல் இயக்கத்தில் குறைந்த அளவு இயலாமை உள்ளவர்களுக்கு மட்டும் காலிப்பணியிடங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கென ஒதுக்கப்பட்ட 3% இடஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும் தேர்வாணையத்தின் விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள் பற்றி 14 (f) ல் குறிப்பிட்டுள்ளவாறு சான்றிதழை தேர்வாணையம் கோரும்போது சமர்ப்பிக்க வேண்டும்.

ஊ. “ஆதரவற்ற விதவைகள்” மற்றும் “முன்னாள் இராணுவத்தினர்களுக்கான” நியமன இட ஒதுக்கீடு விதி இத்தெரிவிற்கு பொருந்தும்.

எ. <u>**உடற்தகுதிச் சான்றிதழ்**</u> :-

இப்பதவிக்கு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் அப்பதவிக்கு கீழ் குறிப்பிட்டுள்ள உடற்தகுதியினை பெற்றிருக்க வேண்டும்.

| உடற்தகுதிச் சான்றிதழ் படிவம் | நிர்ணயிக்கப்பட்டுள்ள பார்வையின் தரம் |
|---|---|
| தமிழ்நாடு அமைச்சுப்பணி,<br>தமிழ்நாடு நீதி அமைச்சுப்பணி,<br>தமிழ்நாடு தலைமைச் செயலகப் பணி | பார்வை தரம் - III அல்லது அதற்கு மேம்பட்ட தரம் |

கண்பார்வை குறைபாடுடைய விண்ணப்பதாரர்கள் தகுதி வாய்ந்த கண் மருத்துவ நிபுணரிடம் (Specialist) கண்பார்வை தகுதிச் சான்றிதழைப் பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.

ஏ. <u>**பணப் பிணையம்**</u>:-

(i) இப்பதவியில் பணியமர்த்தப்படும் ஒவ்வொருவரும் அவர் பணியில் சேரும் நாளிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் பணப்பிணையமாக ரூபாய்.2000/- (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) செலுத்த வேண்டும்.

(ii) பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர்/சீர் மரபினர் ஆகியோர் பணியில் சேரும் நாளிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் பணப் பிணையமாக ரூபாய்.1000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) செலுத்த வேண்டும்.

(iii) பட்டியல் வகுப்பினர்/பட்டியல் வகுப்பினர் (அருந்ததியர்கள்) மற்றும் பட்டியல் பழங்குடியினர் ஆகியோர் பணப்பிணையம் ஏதும் செலுத்தத் தேவையில்லை,

(iv) மேற்குறிப்பிட்டுள்ளவாறு பணப்பிணையம் செலுத்தத் தவறினால் அந்நபர் பணியிலிருந்து நீக்கம் செய்யப்படுவார்.

ஐ. <u>நியமனத்திற்குப் பின் இருப்பிடம்</u> :-

இப்பதவியில் பணியமர்த்தப்படும் ஒவ்வொருவரும், அவர் பதவிப் பொறுப்பிலிருக்கும் கிராமத்தில் அவர் அப்பதவியில் பொறுப்பிலிருக்கும் காலம் வரை தொடர்ந்து வசிக்க வேண்டும்.

ஒ. ஆதிதிராவிட வகுப்பினர் (அருந்ததியர்கள்) முன்னுரிமை வரிசை அடிப்படையில் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் நிரப்பப்பட்ட பிறகும், அவ்வகுப்பினர்களில் தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்கள் இருப்பின் அவ்விண்ணப்பதாரர்கள், ஆதிதிராவிட வகுப்பினர்களுக்காக ஒதுக்கப்பட்ட இட ஒதுக்கீட்டிலும் தகுதியின் அடிப்படையில் நிரப்பப்படுவர். ஆதிதிராவிட வகுப்பினர் அருந்ததியர்களுக்கென ஒதுக்கப்பட்ட காலிப்பணியிடங்களுக்கு தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்கள் கிடைக்கப் பெறாவிடில் அப்பணியிடங்கள் ஆதிதிராவிடர் வகுப்பைச் சார்ந்த (அதாவது ஆதிதிராவிடர் வகுப்பினர் அருந்ததியர்கள் தவிர) தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்களைக் கொண்டு நிரப்பப்படும்.

ஓ. தெரிவுக் குறித்து எழுப்பப்படும் எந்த ஒரு கோரிக்கையும் (விண்ணப்பதாரர் நிலை விண்ணப்பப் படிவத்தில் கோரிய உரிமை தவிர) தெரிவு முடிவுகள் வெளியிடப்பட்ட 90 நாட்களுக்குள் பெறப்பட வேண்டும். 90 நாட்களுக்குப் பின்பு பெறப்படும் தெரிவு குறித்த எந்தவொரு கோரிக்கையும் பரிசீலிக்கப்பட மாட்டாது.

5. <u>எழுத்துத் தேர்விற்கான பாடத்திட்டம் (கொள்குறி வகை)</u>:-

| பாடம் | கால அளவு | அதிகபட்ச மதிப்பெண்கள் | தெரிவிற்குத் தகுதி பெற குறைந்தபட்ச மதிப்பெண்கள |
|---|---|---|---|
| <u>ஒற்றைத் தேர்வுத் தாள்</u><br>**பொது அறிவு**<br>(பத்தாம் வகுப்பு தரம்)<br>(100 வினாக்கள்)<br>+<br>**பொதுத் தமிழ் / பொது ஆங்கிலம்**<br>(பத்தாம் வகுப்பு தரம்)<br>(100 வினாக்கள்) | *3 மணி நேரம்* | *150* + *150* } 300 | 90 |

<u>குறிப்பு:</u>

(i) வினாத்தாள் இரண்டு மாதிரிகளைக் கொண்டது அதாவது 1) பொது அறிவு வினாக்கள் (100 வகைகள்) மற்றும் பொதுத் தமிழ் வினாக்கள் (100 வகைகள்) மற்றும் 2) பொது அறிவு வினாக்கள் (100 வகைகள்) மற்றும் பொது ஆங்கிலம் வினாக்கள் (100 வகைகள்),

விண்ணப்பதாரர்கள், முதல் 100 வினாக்களுக்கு பொது அறிவுத் தேர்விலும், அடுத்த 100 வினாக்களுக்கு பொதுத் தமிழிலோ அல்லது பொது ஆங்கிலத்திலோ பதிலளிக்க வேண்டும்.

(ii) பொது அறிவு வினாத்தாள் தமிழ் மற்றும் ஆங்கிலத்திலும், பொதுத்தமிழ் வினாத்தாள் தமிழிலும், பொது ஆங்கில வினாத்தாள் ஆங்கிலத்திலும் இருக்கும்.

(iii) மேற்குறிப்பிட்ட பாடத்திற்கான பாடத்திட்டம் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் பின்வரும் செய்தி அறிவிப்பு எண்களில் வெளியிடப்பட்டுள்ளது.

| பாடம் | பக்கம் | செய்தி அறிவிப்பு வெளியீட்டு எண். மற்றும் நாள் |
|---|---|---|
| பொது அறிவு (பத்தாம் வகுப்பு தரம்) | 490 | எண் 16, நாள் 01.08.2004 |
| பொதுத்தமிழ் (பத்தாம் வகுப்பு தரம்) | 721 | எண் 11, நாள் 16.05.2001 |
| பொது ஆங்கிலம் (பத்தாம் வகுப்பு தரம்) | 722 | எண் 11, நாள் 16.05.2001 |

மேற்குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கான பாடத்திட்டம் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய இணையதளமான www.tnpsc.gov.in -லும் உள்ளது.

6. **தேர்வு மையங்கள்**

இவ்வறிவிக்கையின் பிற்சேர்க்கை- II -ல் குறிப்பிடப்பட்டுள்ள தேர்வு மையங்களில் எழுத்துத்தேர்வு நடைபெறும்.

குறிப்பு:- தேர்வு மையங்களின் எண்ணிக்கையைக் கூட்டவோ, குறைக்கவோ அல்லது விண்ணப்பதாரர்களை வேறுமையங்களுக்கு ஒதுக்கீடு செய்யவோ தேர்வாணையத்திற்கு உரிமையுண்டு.

7. **தெரிவு செய்யும் முறை**

நியமன இட ஒதுக்கீட்டு விதியை பின்பற்றி, விண்ணப்பதாரர்கள் எழுத்துத் தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் மற்றும் அவர்கள் அளிக்கும் மாவட்டங்களின் முன்னுரிமை வரிசையின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவார்கள்.

8. **தேர்வுக் கட்டணம்** :-

- தேர்வுக் கட்டணம் ரூ.125/- (விண்ணப்பக் கட்டணம் ரூ.50/- + தேர்வுக் கட்டணம் ரூ.75/-) (ரூபாய் நூற்று இருபத்தைந்து மட்டும்)
- தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு கோரும் விண்ணப்பதாரர்கள் விண்ணப்பப்படிவக் கட்டணமாக ரூ.50/-ஐ மட்டும் செலுத்த வேண்டும்.
- விண்ணப்பதாரர்கள் வங்கி அல்லது அஞ்சல் அலுவலகம் அல்லது கட்டணம் செலுத்தும் முகமை ஆகியவைகளுக்கான சேவைக் கட்டணத்தையும் செலுத்த வேண்டும்.
- **நிரந்தரப் பதிவு முறை (One-Time Registration)** யில் ஏற்கெனவே பதிவு செய்து ரூ. 50/-ஐ பதிவு கட்டணமாக செலுத்தி பதிவெண் பெற்றுள்ள விண்ணப்பதாரர்கள் அவ்வசதியினை பெற்ற நாளிலிருந்து 5 வருட காலங்களில் தேர்வாணையம் அறிவிக்கும் எந்த பதவிக்குமான அறிவிக்கைக்கும் விண்ணப்பிக்கும் பொழுதும் விண்ணப்பக் கட்டணத்தைச் **செலுத்தத் தேவையில்லை**. ஆனால் தேர்வுக் கட்டணத்தைச் செலுத்த வேண்டிய விண்ணப்பதாரர்கள்

மேற்குறிப்பிட்ட 5 வருட காலத்திற்குள் தேர்வாணையத்தால் வெளியிடப்படும் அறிவிக்கைக்கு விண்ணப்பிக்கும் போது அதற்குரிய தேர்வுக் கட்டணத்தை செலுத்த வேண்டும்.

(மேலும் விவரங்களுக்கு தேர்வாணையத்தின் விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள் பத்தி 12 ஐ காண்க)

9. **<u>தடையின்மைச் சான்றிதழ்</u> :-**

தேர்வாணையத்தின் “விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள்” பத்தி 15(எ) -ல் உள்ள விதிமுறைகளைக் காண்க.

10. **<u>சலுகைகள்</u> :-**

ஆதி திராவிடர், ஆதி திராவிடர் (*அருந்ததியர்*, பட்டியல் பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு/சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பு, பிற்படுத்தப்பட்ட வகுப்பு *(முஸ்லீம்)*, ஆதரவற்ற விதவை, முன்னாள் இராணுவத்தினர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் மற்ற வகையினைச் சார்ந்தவர்களுக்கான வயது / தகுதி மற்றும் கட்டணச் சலுகைகள் குறித்த விவரங்கள் தேர்வாணையத்தின் விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள் பத்தி 12 முதல் 14 வரை கொடுக்கப்பட்டுள்ளது.

11. **<u>விண்ணப்பிக்கும் முறை</u>:-**

- விண்ணப்பதாரர்கள் இணையவழி மூலமாக மட்டுமே தேர்வாணையத்தின் இணையதள முகவரியான (www.tnpsc.gov.in) அல்லது (www.tnpscexams.net) ல் விண்ணப்பிக்க வேண்டும்.
- விண்ணப்பிக்கும் முன், அண்மையில் எடுக்கப்பட்ட தங்களது புகைப்படம் மற்றும் கையொப்பங்களின் படிம நகல்களை (Scanned images) குறுந்தகடு / இலக்கமுறை குறுந்தகடு /பென்டிரைவ் (CD/DVD/Pen Drive) போன்ற தகவல் சேமிப்பு சாதனங்களில் விண்ணப்பதாரர்கள் சேமித்து வைத்திருக்கவேண்டும்.
- இணைய வழி விண்ணப்பத்தினை பதிவு செய்ய சரியான மின் அஞ்சல் முகவரியோ மற்றும் கைப்பேசி எண்ணோ அவசியமானதாகும். தெரிவு முடிவுகள் வெளியிடப்படும்வரை விண்ணப்பதாரர்கள் தங்களது மின்அஞ்சல் முகவரி மற்றும் தொலைபேசி எண்ணைப் பயன்பாட்டு நிலையில் வைத்திருக்க வேண்டும். தேர்வாணையத்தால் விண்ணப்பதாரர்களுக்கு எழுத்துத்தேர்வில் கலந்து கொள்வதற்கான தேர்வுக் கூட நுழைவுச்சீட்டு (அனுமதி குறிப்பாணை), நேர்காணல் தேர்வில் கலந்து கொள்வதற்கான அழைப்பாணை மற்றும் பிற குறிப்பாணைகள் போன்றவற்றை விண்ணப்பதாரர்களால் பதிவு செய்யப்பட்ட மின்அஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும். மேலும் அவற்றை தேர்வாணைய இணைதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
- இணையவழி விண்ணப்பத்தில் குறிப்பிடப்படும் விண்ணப்பதாரரின் பெயர், விண்ணப்பிக்கும் பதவி, இனம், பிறந்த நாள், முகவரி, மின்அஞ்சல் முகவரி, தேர்வு மையம் உள்ளிட்ட விவரங்கள் அனைத்தும் இறுதியானதாகக் கருதப்படும். இணையவழி விண்ணப்பிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள கடைசி நாளுக்கு பின்னர் எவ்வித மாறுதலும் செய்ய அனுமதி கிடையாது. மேலும், சில முக்கிய விவரங்கள் அடங்கிய புலங்களை (Fields) பின்னர் மாற்ற முடியாது என்பதால் விண்ணப்பத்தினை நிரப்பும்போது, தேர்வர்கள் மிகுந்த கவனத்துடன்

செயல்படுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இது தொடர்பாக விண்ணப்பதாரர்களால் மேற்கொள்ளப்படும் எந்த விதக் கடிதத் தொடர்பும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

- குறுஞ்செய்திகளைப் பெற விரும்பும் விண்ணப்பதாரர்கள் தங்களது கைப்பேசி எண்ணை விண்ணப்பத்தில் தெரிவிக்க வேண்டும்.

11.(அ) **இணைய வழி விண்ணப்பித்தல் :-**

1) விண்ணப்பதாரர்கள் முதலில் தேர்வாணையத்தின் இணையதள முகவரியான www.tnpsc.gov.in அல்லது www.tnpscexams.net எனும் முகவரியை அணுகவும்.

2) இணையவழி விண்ணப்பத்தினைக் கண்ணுற "இணையவழி மூலம் விண்ணப்பம்" எனும் புலத்தை சொடுக்கவும்.
3) விண்ணப்பிக்க விரும்பும் பதவி அல்லது பணித் தொகுதியை தெரிவு செய்யவும்.
4) நீங்கள் ஏற்கனவே நிரந்தரப் பதிவு முறையின் (One-Time Registration) மூலம் தனித்துவ / பிரத்யேக எண் பெற்றிருப்பின், அந்த எண்ணையும், கடவுச் சொல்லையும் (Pass Word) பதிவு செய்து, ஏற்கெனவே உள்ள விவரங்களைக் காணவும், தேவையெனில் தகுந்த மாறுதல் (Update) செய்யலாம்
5) நீங்கள் தகுந்த தனித்துவ / பிரத்யேக எண்ணை பெற்றிருக்கவில்லையெனில், எந்த புலத்தையும் விடுபடாமல் அனைத்து தேவையான விவரங்களையும் பதிவு (Enter) செய்யவும்.
6) "புகைப்படம் மற்றும் கையொப்பம் ஆகியவற்றை படிம நகல் எடுப்பதற்கான வழிகாட்டல்கள்" என்ற இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தங்களது புகைப்படம் மற்றும் கையொப்பத்தை பதிவேற்றம் செய்யவும். புகைப்படம் மற்றும் கையொப்பம் இணைக்கப்படாத விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

11.(ஆ) **கட்டணம் செலுத்தும் முறை:-**

விண்ணப்பக் கட்டணத்தை செலுத்தும் முறையை தெரிவு செய்யவும். (**நேரடி அல்லது இணையவழி**)

11.(இ) **இணைய வழியில் செலுத்தும் முறை (இணைய வழி வங்கிச் சேவை / கடன் அட்டை / பற்று அட்டை) :-**

1) இணைய வழி வங்கிச் சேவை (Net Banking), கடன் அட்டை (Credit Card). பற்று அட்டை (Debit Card) ஆகியவற்றின் வாயிலாக தேர்வுக் கட்டணம் செலுத்துபவரின் கவனத்திற்காக வழங்கப்பட்டுள்ள விதிமுறைகளை பின்பற்றி தேர்வுக் கட்டணத்தை செலுத்தவும்.
2) கட்டணம் தொடர்பான விவரங்களை இணைய வழி விண்ணப்பத்தில் நிரப்பியவுடன் சேவையகத்திடமிருந்து (Server) தகவல் வரும் வரை காத்திருக்கவும். இரட்டிப்பு செலுத்துகையைத் தவிர்க்கும் பொருட்டு 'முந்தைய' (Back) அல்லது புதுப்பி (Refresh) பொத்தானை அழுத்தாதீர்.
3) இணைய வழி தொடர்பான நடவடிக்கைகள் வெற்றிகரமாக முடிவுற்றவுடன் ஒரு பதிவு எண்ணும், கடவுச்சொல்லும் (Password) காணக்கிடைக்கும். விண்ணப்பதாரர்கள் எதிர்கால

தொடர் பயன்பாட்டிற்காக பதிவு எண்ணையும், கடவுச்சொல்லையும் குறித்து வைத்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

11(ஈ) **<u>நேரடிக் கட்டணம் செலுத்தும் முறை (அஞ்சல் அலுவலகம் அல்லது இந்தியன் வங்கி மூலம்)</u> :-**

1) நேரடிக் கட்டணம் செலுத்தும் முறையைத் தேர்ந்தெடுக்கும் விண்ணப்பதாரர்கள் கட்டணத்தைச் செலுத்த குறிப்பிடப்பட்ட அஞ்சலகம் அல்லது இந்தியன் வங்கியைத் தேர்ந்தெடுக்கலாம்

2) விண்ணப்பத்தை சமர்ப்பிக்க **<u>‘சமர்ப்பி’</u>** (SUBMIT) எனும் புலத்தினைச் சொடுக்கவும்.

3) விண்ணப்பதாரர்களுக்கு ஒரு விண்ணப்ப எண்ணும், ஒரு கடவுச் சொல்லும் வழங்கப்படும். இவற்றை குறித்து வைத்துக் கொள்ளுமாறு விண்ணப்பதாரர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

4) விண்ணப்பத்தை சமர்ப்பித்தவுடன் தோன்றும் செலுத்துச் சீட்டை அச்சுப்படி (Print Out) எடுத்து அருகாமையிலுள்ள இந்தியன் வங்கி கிளைக்கோ அல்லது குறிப்பிடப்பட்டுள்ள அஞ்சலகத்திற்கோ சென்று கட்டணத்தை செலுத்தவும்.

5) பின்னர், விண்ணப்பதாரர்களுக்குரிய செலுத்துச் சீட்டினை வங்கி அல்லது அஞ்சலகக் கிளையிலிருந்து பெற்று, அதில் செலுத்துச் சீட்டு முறையாக ஒப்பமிடப்பட்டுள்ளதா எனவும், நடவடிக்கை எண், கிளையின் பெயர், டி.பி. (DP)குறியீட்டு எண், பணம் செலுத்திய நாள் ஆகியவை சரியாக குறிப்பிடப்பட்டுள்ளனவா என்பதை உறுதி செய்யவும்.

6) பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து இரண்டு வேலை நாட்களுக்குள் அஞ்சலகத்திலோ, இந்தியன் வங்கியிலோ கட்டணம் செலுத்தபட்டால் மட்டுமே விண்ணப்பதாரர்களின் விண்ணப்பம் வெற்றிகரமாக பதிவு செய்யப்பட்டுள்ளதாகக் கருதப்படும்.

11.(உ) **<u>அச்சுப்படி எடுத்தல்</u> :-**

1) விண்ணப்பித்தப் பிறகு விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பத்தினை அச்சுப்படி (Print) எடுக்க முடியும்/PDF படிவத்தில் சேமிக்க முடியும்.

2) தேவைப்படின், தங்களது பதிவு எண், கடவுச்சொல் ஆகியவற்றைக் கொண்டு விண்ணப்பத்தினை பதிவிறக்கம் செய்யவோ, அச்சுப்படி எடுக்கவோ இயலும்.

3) விண்ணப்பதாரர்கள் தங்களது இணையவழி அச்சுப்படியினையோ, செலுத்துச் சீட்டின் நகலையோ பிற தொடர்புடைய ஆவணங்களையோ தேர்வாணையத்திற்கு அனுப்பத் தேவையில்லை. விண்ணப்பதாரர்கள் அடுத்தக்கட்ட தெரிவிற்கு தகுதிபெறும் நிலையில் மட்டுமே அவர்களுடைய சான்றிதழ்கள் சரிபார்க்கப்படும்.

**<u>குறிப்பு</u>:-**

I. விண்ணப்பதாரர்கள், இணைய வழி மூலம் விண்ணப்பிக்கும்போதும் தேர்வு கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள் செலுத்தும்போதும் இணைய /வலைதள நெரிசலினால் தேர்வாணையத்தின் வலைதளத்தை தொடர்பு கொள்ள இயலாமை/தொடர்பு துண்டிக்கப்படுதல் ஆகியவற்றை தவிர்க்க இறுதி நாள் வரை காத்திராமல் முன்கூட்டியே விண்ணப்பிக்க அறிவுறுத்தப்படுகிறார்கள்.

II. மேலே குறிப்பிட்ட காரணங்களினால் விண்ணப்பதாரர்கள் தங்களின் விண்ணப்பங்களை உரிய கால கட்டத்திற்குள் (அ) கடைசி நாளைக்கு முன்பாக சமர்ப்பிக்க இயலாத சூழல்

ஏற்படின் அத்தகைய காரணங்களுக்கு தேர்வாணையம் எவ்விதத்திலும் பொறுப்பாகாது. இதைத்தவிர வேறு ஏதேனும் காரணங்களினால் ஏற்படும் கால தாமதத்திற்கும் தேர்வாணையம் எவ்விதத்திலும் பொறுப்பாகாது.

III. மின்னஞ்சல் முகவரி இல்லாத விண்ணப்பதாரர்கள் தங்களுக்கென தனியாக ஒரு மின்னஞ்சல் முகவரியை விண்ணப்பிப்பதற்கு முன் உருவாக்கி வைத்துக்கொள்ள வேண்டும். எத்தகைய சூழ்நிலையிலும் தங்களது மின்னஞ்சல் முகவரி/அலைபேசி எண்ணை மூன்றாம் நபரோடு பகிர்ந்துகொள்ளவோ / தெரிவிக்கவோ வேண்டாம் என விண்ணப்பதாரர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

IV. இணைய வழி விண்ணப்பத்தில் ஏதேனும் மாறுதல்கள் இருப்பின் அவற்றை திருத்திக்கொள்ளும் வகையில் இணைய வழி விண்ணப்பம் உருவாக்கப்பட்டுள்ளது. எனவே விண்ணப்பதாரர்கள் தங்கள் குறித்த விவரங்கள் ஏதேனும் மாறுதல் செய்யப்பட வேண்டி

இருப்பின் மேற்கூறிய வசதியினை பயன்படுத்தி விண்ணப்பம் பூர்த்தி செய்வதற்கான கடைசி நாள் வரை மாறுதல் செய்து கொள்ளலாம். இறுதி நாளைக்கு பிறகு எத்தகைய மாறுதல்களும் செய்ய இயலாது என்பதால் அறிவிக்கையில் அறிவிக்கப்பட்ட பதவிக்கு விண்ணப்பதாரர்கள் மிகுந்த கவனத்துடன் இணைய வழி விண்ணப்பத்தினை பூர்த்தி செய்யுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். மேலும் தேர்வுக் கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள் குறித்த விவரங்களை அதற்குரிய கலத்தில் மிகுந்த கவனத்துடன் பூர்த்தி செய்ய வேண்டும். அத்தகைய கலத்தில் எத்தகைய மாறுதல் செய்யவோ, திருத்தவோ இயலாத வகையில் உருவாக்கப்பட்டிருப்பதனால் மிகுந்த கவனத்துடன் பூர்த்தி செய்ய அறிவுறுத்தப்படுகிறார்கள்.

தேர்வுக் கட்டணம் செலுத்தப்பட்ட விவரங்கள் அல்லது அதில் ஏற்படும் தவறுகளுக்கு தேர்வாணையம் பொறுப்பாகாது (அ) அது குறித்து எழுப்பப்படும் எந்த ஒரு கோரிக்கையும் பரிசீலிக்கப்பட மாட்டாது.

V. விண்ணப்பதாரர்கள் இணைய வழி விண்ணப்பத்தில் உள்ள அனைத்துக் கலங்களிலும் தங்கள் குறித்த விவரங்களை மிகுந்த கவனத்துடன் தவறாமல் பூர்த்தி செய்ய வேண்டும். குறிப்பாக தங்களுடைய பெயர் ஆண் / பெண், தந்தையின் பெயர் / கணவர் பெயர் மற்றும் ஏனைய விவரங்களில் தவறு ஏற்படா வண்ணம் சான்றிதழ்களில் உள்ளவாறு பதிவு செய்யப்பட வேண்டும். அனைத்து விவரங்களையும் பூர்த்தி செய்யப்பட்ட பின் இறுதியில் சமர்ப்பிக்கவும் (submit) என்ற பொத்தானை அழுத்துவதற்கு முன் மீண்டும் ஒரு முறை அனைத்து கலங்களும் நிரப்பப்பட்டிருக்கிறதா என்று சரிபார்த்த பின்னரே சமர்ப்பிக்கவும் (submit) என்ற பொத்தானை இறுதியாக அழுத்த வேண்டும் எனவும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

VI. பூர்த்தி செய்யப்பட்ட இணையவழி விண்ணப்பப் படிவத்தில் திருத்தம்/மாறுதல் செய்வதற்காக கூறப்பட்ட இறுதி நாளுக்குப் பிறகு திருத்தம்/மாறுதல் கோரும் கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. தவறான/முழுமையற்ற விவரங்களை பூர்த்தி செய்யப்பட்டிருப்பது அல்லது தேவைப்படும் விவரங்களை விண்ணப்பப்படிவத்தில் பூர்த்தி செய்யப்படாமல் உள்ள விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் குறித்து எழுப்பப்படும் எந்த ஒரு கோரிக்கைக்கும் தேர்வாணையம் பொறுப்பாகாது.

VII. இணைய வழியில் தேர்வுக் கட்டணம் செலுத்துவதில் ஏற்படும் தவறுகளுக்கு தேர்வாணையம் பொறுப்பாகாது.

VIII. சந்தேகங்கள் குறித்த விவரங்களுக்கு தேர்வாணையத்தின் உதவி மைய எண் 1860 345 0112 -ஐ தொடர்பு கொள்ளவும்.

12. **ஏனைய முக்கிய அறிவுரைகள்** :-

அ. **விண்ணப்பதாரர்கள் தேர்விற்கான தங்களுடைய தகுதிகளை உறுதிசெய்தல்**:-

தேர்விற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் தாங்கள் அத்தேர்விற்கான அனைத்துத் தகுதிகளையும் பெற்றுள்ளனரா என உறுதி செய்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு நிலையிலான அனுமதியும் அவர்களின் தகுதி நிறைவானதென உறுதி செய்யப்படும் வரை தற்காலிகமானது. தேர்விற்கான அனுமதிச் சீட்டு வழங்குவதால் மட்டும் அவர்களின் விண்ணப்பதாரர்நிலை தேர்வாணையத்தால் முழுமையாக ஏற்றுக் கொள்ளப்பட்டது என கருத இயலாது.

ஆ. **விண்ணப்பிக்கும் முறை**:-

விண்ணப்பதாரர்கள் தேர்வாணையத்தின் இணையதள முகவரியான www.tnpsc.gov.in அல்லது www.tnpscexams.net -ஐப் பயன்படுத்தி இணையவழி விண்ணப்பிக்கலாம். இணையவழி விண்ணப்பத்தினை பூர்த்தி செய்வதற்கான விரிவான அறிவுரைகள் யாவும் இவ்வறிவிக்கையின் பத்தி 11 ல் குறிப்பிடப்பட்டுள்ளன.

இ. தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்களுக்கான தேர்வுக் கூட அனுமதிச்சீட்டினை தேர்வாணையத்தின் இணையதள முகவரியான www.tnpsc.gov.in ல் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். **தபால் மூலம் தேர்வுக் கூட அனுமதிச்சீட்டு அனுப்பிவைக்கப்படமாட்டாது.**

ஈ. விண்ணப்பதாரர்களுக்கான குறை தீர்ப்பு மையத்தின் மூலம் விண்ணப்பதாரர்கள் தேர்வாணையத்தினை, நேரடியாகவோ அல்லது தொலைபேசி எண். 044-28297591-92, 044-28297584-86 அல்லது தேர்வாணையத்தின் கட்டணமில்லா சேவை எண். 1800 425 1002 மூலமாகவோ, தங்களுடைய

விண்ணப்பங்கள் தொடர்பான / வழிகாட்டல் / தகவல் / கருத்து ஆகியனவற்றை குறித்தும் எல்லா வேலை நாள்களிலும் 10.00 மு.ப முதல் 05.45 பி.ப வரை தொடர்பு கொண்டு உரிய தகவலை பெற்றுக்கொள்ளலாம்.

உ. **கைப்பேசி மற்றும் ஏனைய பொருள்களுக்கும் தடை**:-

(i) விண்ணப்பதாரர்கள் அகவி, கைப்பேசி, கணிப்பான், ஞாபகக் குறிப்புகள், புத்தகங்கள், மின்னணுக் கருவிகள், பதிவுக் கருவிகள் ஆகியவற்றை தனியாகவோ விண்ணப்பதாரரின் மோதிரம் அல்லது கைக்கடிகாரத்தின் இணைப்பாகவோ கொண்டுவரக்கூடாது.

(ii) அவ்வாறான பொருட்களை வைத்திருப்போர் காணப்பட்டால் அவர்கள் தொடர்ந்து தேர்வு எழுத அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் அவர்களது விடைத்தாள் செல்லாததாக்கப்படுதுடன் தேர்வு எழுதுவதிலிருந்து விலக்கியும் வைக்கப்படுவர். தேவைப்படின் அவ்விடத்திலேயே முழுச் சோதனைக்கு உட்படுத்தப்படுவர்.

(iii) தேர்வுக் கூடத்திற்குள் அனுமதிக்கப்பட்ட எழுது பொருட்களான பேனா தவிர (வண்ண எழுதுகோல் அல்லது பென்சிலாக அல்லாமல்) புத்தகங்கள், குறிப்புகள் தனித் தாள்கள், கணித

மற்றும் வரைபடக் கருவிகள் மடக்கை அட்டவணை, படியெடுக்கப்பட்ட வரைபடம், காட்சி வில்லைகள், பாடப்புத்தகங்கள், பொதுக் குறிப்புத் தாட்கள் ஆகியவற்றைக் கொண்டுவரக்கூடாது.

(iv) தடை செய்யப்பட்ட பொருள்களை எடுத்துவரும் பட்சத்தில் அப்பொருள்களை பாதுகாப்பதற்கான எவ்வித சிறப்பு ஏற்பாடுகள் செய்து தர உத்தரவாதம் அளிக்க இயலாததால் விண்ணப்பதாரர்கள் தடை செய்யப்பட்டப் பொருட்களைத் தேர்வுக் கூடத்திற்கு கொண்டு வர வேண்டாம் என அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**ஊ.** விண்ணப்பதாரர்கள் தங்களது வயது, கல்வித்தகுதி, அனுபவம், சாதி மற்றும் உடற்குறைபாடு தொடர்பான சான்றிதழ்கள் மற்றும் ஏணைய சான்றிதழ்களை சான்றாக விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பத் தேவையில்லை. அவை தேர்வாணையம் கேட்கும் தருணத்தில் தாக்கல் செய்யப்பட வேண்டும். தேர்வுக்கு விண்ணப்பிப்பவர்கள் அத்தேர்விற்கு அனுமதிக்கப்பட தகுதியுள்ளவர் என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். விண்ணப்பதாரர்களால் தெரிவிக்கப்பட்டுள்ள தகவல்களைத் தேர்வாணையம் ஐயமறத் தெளிந்து கொள்ளும்வரை அவர்களின் விண்ணப்பங்கள் எழுத்துத் தேர்விற்கும் மற்றும் நேர்முகத் தேர்விற்கும் (அதாவது எல்லா நிலைகளிலும்) தற்காலிகமாக

ஏற்கப்பட்டுள்ளதாகவே கருதப்படும். விண்ணப்பதாரர்களால் தெரிவிக்கப்படும் தகவல்கள் போதுமான மற்றும் ஏற்கத்தகுந்த காரணங்கள் இல்லையென்றும், நியமனத்திற்கு போட்டியிடத் தகுதியற்றவர் எனத் தேர்வாணையத்தால் கண்டறியப்பட்டால் எந்நிலையிலும், அதாவது தெரிவிற்கு தெரிந்தெடுக்கப்பட்ட பின்னர் கூட விண்ணப்பத்தை நிராகரிக்கும் உரிமை உண்டு.

**எ.** விண்ணப்பதாரர்களால் தெரிவிக்கப்பட்டுள்ள தகவல்கள் தவறு எனக் கண்டறியப்பட்டால் அவ்விண்ணப்பதாரர்கள் மீது ஒழுங்கு குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ள தேர்வாணையத்திற்கு உரிமை உண்டு.

**ஏ.** **ஒழுங்கீனச் செயல்களுக்குத் தடை:-**

தேர்வு எழுதும் அறையில் மற்ற விண்ணப்பதாரர்களுடைய விடைத்தாள்களிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது மற்ற விண்ணப்பதாரர்கள் தன்னுடைய விடைத்தாளிலிருந்து பார்த்து எழுத அனுமதித்தல் அல்லது வேறு ஏதேனும் முறையற்ற உதவிகளைப் பெறவோ அல்லது பெற முயற்சிக்கவோ அல்லது அத்தகைய முறையற்ற உதவிகளைத் தரவோ அல்லது தர முயற்சிக்கவோ கூடாது. அத்தகைய விண்ணப்பதாரர்கள் தேர்வாணையம் நடத்தும் தேர்வுகள் மற்றும் தெரிவுகளில் அவர்களின் உரிமையை தேர்வாணையம் முடிவு செய்யும் ஒரு குறிப்பட்ட காலத்திற்கு இழக்க நேரிடும்.

**ஐ.** **தேர்வுக் கூடத்தில் நடந்து கொள்ளும் முறை:-**

தேர்வு எழுதும் எந்த ஒரு விண்ணப்பதாரரும் தேர்வுக் கூடத்தில் தவறான நடவடிக்கையிலோ அல்லது தேர்வினை சீர்குலைக்கும் நோக்கத்திலோ அல்லது தேர்வாணையத்தால் தேர்வினை நடத்த பணியில் அமர்த்தப்பட்டுள்ள பணியாளர்களை தாக்கும் முயற்சியில் ஈடுபடும் விண்ணப்பதாரர்களின் செயல்கள் கடுந்தவறாக கருதப்பட்டு அவ்விண்ணப்பதாரர்களை தண்டனைக்கு உட்படுத்த தேர்வாணையத்திற்கு உரிமை உண்டு.

**<u>இணைய வழி மூலம் விண்ணப்பிக்கும் வசதி 10.08.2012 அன்று இரவு 11.59 மணிக்கு அதற்கான சேவை நிறுத்தப்படும்.</u>**

(மேலும் கூடுதல் தகவல்களுக்கு தேர்வாணையத்தின் விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகளை தேர்வாணையத்தின் இணையதள முகவரியான www.tnpsc.gov.in –ல் காணலாம்).

**செயலாளர்.**

**பிற்சேர்க்கை - I**

**2012 - 2013ம் ஆண்டிற்குரிய கிராம நிர்வாக அலுவலர் பதவிக்கான மாவட்ட வாரியான தற்காலிக காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை**

| **வரிசை எண்** | **மாவட்டம்** | **காலிப்பணியிடம்** |
|---|---|---|
| 1. | அரியலூர் | 49 |
| 2. | கோயம்புத்தூர் | 31 |
| 3. | கடலூர் | 88 |
| 4. | தர்மபுரி | 9 |
| 5. | திண்டுக்கல் | 15 |
| 6. | ஈரோடு | 32 |
| 7. | காஞ்சிபுரம் | 123 |
| 8. | கரூர் | 36 |
| 9. | கிருஷ்ணகிரி | 73 |
| 10. | மதுரை | 29 |
| 11. | நாகப்பட்டினம் | 123 |
| 12. | நாமக்கல் | 14 |
| 13. | பெரம்பலூர் | 18 |
| 14. | புதுக்கோட்டை | 105 |
| 15. | இராமநாதபுரம் | 24 |
| 16. | சேலம் | 15 |
| 17. | சிவகங்கை | 81 |
| 18. | தஞ்சாவூர் | 177 |
| 19. | நீலகிரி | 31 |
| 20. | தேனி | 7 |
| 21. | தூத்துக்குடி | 28 |
| 22. | திருச்சிராப்பள்ளி | 55 |
| 23. | திருநெல்வேலி | 18 |
| 24. | திருவள்ளூர் | 100 |
| 25. | திருப்பூர் | 43 |
| 26. | திருவாரூர் | 127 |
| 27. | திருவண்ணாமலை | 115 |
| 28. | வேலூர் | 112 |
| 29. | விருதுநகர் | 25 |
| 30. | விழுப்புரம் | 167 |
| | **மொத்தம்** | **1870** |

## பிற்சேர்க்கை – II

| மாவட்டம் | மையம் | குறியீட்டு எண் |
|---|---|---|
| அரியலூர் | அரியலூர் | 3001 |
| | செந்துறை | 3002 |
| | உடையார்பாளையம் | 3003 |
| சென்னை - மத்தி | அண்ணா நகர் | 0101 |
| | அரும்பாக்கம் | 0102 |
| | அசோக் நகர் | 0103 |
| | அயனாவரம் | 0104 |
| | எழும்பூர் | 0105 |
| | கீழ்பாக்கம் | 0106 |
| | குளத்தூர் | 0107 |
| | நுங்கம்பாக்கம் | 0108 |
| | பெரம்பூர் | 0109 |
| | புரசைவாக்கம் | 0110 |
| | திருவல்விக்கேணி | 0111 |
| | வடபழநி | 0112 |
| | வில்விவாக்கம் | 0113 |
| சென்னை - வடக்கு | ஜார்ஜ் டவுன் | 0121 |
| | இராயபுரம் | 0122 |
| | திருவொற்றியூர் | 0123 |
| | தண்டையார்பேட்டை | 0124 |
| | வண்ணாரப்பேட்டை | 0125 |
| சென்னை - தெற்கு | அடையார் | 0141 |
| | மயிலாப்பூர் | 0142 |
| | சைதாப்பேட்டை | 0143 |
| | டி. நகர் | 0144 |
| | திருவான்மியூர் | 0145 |
| | வேளச்சேரி | 0146 |
| கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் வடக்கு | 0201 |
| | கோயம்புத்தூர் தெற்கு | 0202 |

| மாவட்டம் | மையம் | குறியீட்டு எண் |
|---|---|---|
| கோயம்புத்தூர் | மேட்டுப்பாளையம் | 0203 |
| | பொள்ளாச்சி | 0204 |
| | சோலூர் | 0205 |
| | வால்பாறை | 0206 |
| கடலூர் | கடலூர் | 0301 |
| | சிதம்பரம் | 0302 |
| | காட்டுமன்னார்கோவில் | 0303 |
| | குறிஞ்சிபாடி | 0304 |
| | நெய்வேலி | 0305 |
| | பண்ருட்டி | 0306 |
| | திட்டக்குடி | 0307 |
| | விருதாச்சலம் | 0308 |
| தர்மபுரி | தர்மபுரி | 0401 |
| | அரூர் | 0402 |
| | பாலக்கோடு | 0403 |
| | பாப்பிரெட்டிபட்டி | 0404 |
| | பென்னகரம் | 0405 |
| திண்டுக்கல் | திண்டுக்கல் | 0501 |
| | ஆத்தூர் | 0502 |
| | கொடைக்கானல் | 0503 |
| | நத்தம் | 0504 |
| | நிலக்கோட்டை | 0505 |
| | ஒட்டன்சத்திரம் | 0506 |
| | பழநி | 0507 |
| | வேடசந்தூர் | 0508 |
| ஈரோடு | ஈரோடு | 0601 |
| | பவானி | 0602 |
| | கோபிச்செட்டிப்பாளையம் | 0603 |
| | பெருந்துறை | 0604 |

| மாவட்டம் | மையம் | குறியீட்டு எண் |
|---|---|---|
| ஈரோடு | சத்தியமங்கலம் | 0605 |
| காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் | 0701 |
| | ஆலந்தூர் | 0702 |
| | செங்கல்பட்டு | 0703 |
| | செய்யார் | 0704 |
| | மதுராந்தகம் | 0705 |
| | சோழிங்கநல்லூர் | 0706 |
| | ஸ்ரீபெரும்பதூர் | 0707 |
| | தாம்பரம் | 0708 |
| | திருகழுக்குன்றம் | 0709 |
| | உத்திரமேரூர் | 0710 |
| கன்னியாகுமரி | நாகர்கோவில் | 0801 |
| | கன்னியாகுமரி | 0802 |
| | குளித்துறை | 0803 |
| | தக்கலை | 0804 |
| | தோவாளை | 0805 |
| கரூர் | கரூர் | 0901 |
| | அரவக்குறிச்சி | 0902 |
| | கடவூர் | 0903 |
| | கிருஷ்ணராயபுரம் | 0904 |
| | குளித்தலை | 0905 |
| கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி | 3101 |
| | தென்கனிக்கோட்டை | 3102 |
| | ஓசூர் | 3103 |
| | போச்சாம்பள்ளி | 3104 |
| | ஊத்தங்கரை | 3105 |
| மதுரை | மதுரை வடக்கு | 1001 |
| | மதுரை தெற்கு | 1002 |
| | மேலூர் | 1003 |
| | பேரையூர் | 1004 |
| | திருமங்கலம் | 1005 |
| | உசிலம்பட்டி | 1006 |
| | வாடிப்பட்டி | 1007 |
| நாகப்பட்டினம் | நாகப்பட்டினம் | 1101 |

| மாவட்டம் | மையம் | குறியீட்டு எண் |
|---|---|---|
| நாகப்பட்டினம் | குற்றாலம் | 1103 |
| | மயிலாடுதுறை | 1104 |
| | சீர்காழி | 1105 |
| | தரங்கம்பாடி | 1106 |
| | திருக்குவளை | 1107 |
| | வேதாரண்யம் | 1108 |
| நாமக்கல் | நாமக்கல் | 1201 |
| | பரமத்தி வேலூர் | 1202 |
| | இராசிபுரம் | 1203 |
| | திருச்செங்கோடு | 1204 |
| நீலகிரி | உதகமண்டலம் | 1301 |
| | குன்னூர் | 1302 |
| | கூடலூர் | 1303 |
| | கோத்தகிரி | 1304 |
| | குந்தா | 1305 |
| | பந்தலூர் | 1306 |
| பெரம்பலூர் | பெரம்பலூர் | 1401 |
| | குன்னம் | 1402 |
| | வேப்பந்தட்டை | 1403 |
| புதுக்கோட்டை | புதுக்கோட்டை | 1501 |
| | ஆலங்குடி | 1502 |
| | அறந்தாங்கி | 1503 |
| | ஆவுடையார் கோவில் | 1504 |
| | கந்தர்வகோட்டை | 1505 |
| | இலுப்பூர் | 1506 |
| | கரம்பக்குடி | 1507 |
| | குளத்தூர் | 1508 |
| | மணமேல்குடி | 1509 |
| | பொன்னமராவதி | 1510 |
| | திருமயம் | 1511 |
| இராமநாதபுரம் | இராமநாதபுரம் | 1601 |
| | கடலாடி | 1602 |
| | கமுதி | 1603 |
| | முதுகுளத்தூர் | 1604 |

| மாவட்டம் | மையம் | குறியீட்டு எண் |
|---|---|---|
| | கீவலூர் | 1102 |
| இராமநாதபுரம் | இராமேஸ்வரம் | 1606 |
| | திருவாடானை | 1607 |
| சேலம் | சேலம் | 1701 |
| | ஆத்தூர் | 1702 |
| | எடப்பாடி | 1703 |
| | கங்காவள்ளி | 1704 |
| | மேட்டுர் | 1705 |
| | ஓமலூர் | 1706 |
| | சங்ககிரி | 1707 |
| | வாழப்பாடி | 1708 |
| | ஏற்காடு | 1709 |
| சிவகங்கை | சிவகங்கை | 1801 |
| | தேவக்கோட்டை | 1802 |
| | இளையான்குடி | 1803 |
| | காரைக்குடி | 1804 |
| | மானாமதுரை | 1805 |
| | திருப்பத்தூர் | 1806 |
| தஞ்சாவூர் | தஞ்சாவூர் | 1901 |
| | கும்பகோணம் | 1902 |
| | ஒரத்தநாடு | 1903 |
| | பாபநாசம் | 1904 |
| | பட்டுக்கோட்டை | 1905 |
| | பேராவூரணி | 1906 |
| | திருவையாறு | 1907 |
| | திருவிடைமருதூர் | 1908 |
| தேனி | தேனி | 2001 |
| | ஆண்டிப்பட்டி | 2002 |
| | போடிநாயக்கனூர் | 2003 |
| | பெரியகுளம் | 2004 |
| | உத்தமபாளையம் | 2005 |
| திருவள்ளூர் | திருவள்ளூர் | 2101 |
| | அம்பத்தூர் | 2102 |
| | ஆவடி | 2103 |
| | கும்முடிப்பூண்டி | 2104 |

| மாவட்டம் | மையம் | குறியீட்டு எண் |
|---|---|---|
| | பரமக்குடி | 1605 |
| திருவள்ளூர் | பள்ளிப்பட்டு | 2106 |
| | பட்டாபிராம் | 2107 |
| | பொன்னேரி | 2108 |
| | பூந்தமல்லி | 2109 |
| | திருத்தணி | 2110 |
| | ஊத்துக்கோட்டை | 2111 |
| திருவண்ணாமலை | திருவண்ணாமலை | 2201 |
| | ஆரணி | 2202 |
| | செங்கம் | 2203 |
| | செய்யார் | 2204 |
| | போளுர் | 2205 |
| | தண்டாரம்பட்டு | 2206 |
| | வந்தவாசி | 2207 |
| திருவாரூர் | திருவாரூர் | 2301 |
| | குடவாசல் | 2302 |
| | மன்னார்குடி | 2303 |
| | நன்னிலம் | 2304 |
| | நீடாமங்கலம் | 2305 |
| | திருத்துறைப்பூண்டி | 2306 |
| | வலங்கைமான் | 2307 |
| தூத்துகுடி | தூத்துகுடி | 2401 |
| | எட்டயபுரம் | 2402 |
| | கோவில்பட்டி | 2403 |
| | ஒட்டபிடாரம் | 2404 |
| | சாத்தான்குளம் | 2405 |
| | ஸ்ரீவைகுண்டம் | 2406 |
| | திருச்செந்தூர் | 2407 |
| | விளாத்திகுளம் | 2408 |
| திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி | 2501 |
| | லால்குடி | 2502 |
| | மணச்சநல்லூர் | 2503 |
| | மணப்பாறை | 2504 |
| | முசிரி | 2505 |
| | ஸ்ரீரங்கம் | 2506 |

| | மாதவரம் | 2105 |
|---|---|---|
| **மாவட்டம்** | **மையம்** | **குறியீட்டு எண்** |
| திருச்சிராப்பள்ளி | தொட்டியம் | 2508 |
| | துறையூர் | 2509 |
| திருநெல்வேலி | திருநெல்வேலி | 2601 |
| | ஆலங்குளம் | 2602 |
| | அம்பாசமுத்திரம் | 2603 |
| | நான்குநேரி | 2604 |
| | பாளையங்கோட்டை | 2605 |
| | இராதாபுரம் | 2606 |
| | சங்கரன்கோவில் | 2607 |
| | செங்கோட்டை | 2608 |
| | சிவகிரி | 2609 |
| | தென்காசி | 2610 |
| | வள்ளியூர் | 2611 |
| | வீரகேரளம்புதூர் | 2612 |
| திருப்பூர் | திருப்பூர் | 3201 |
| | அவினாசி | 3202 |
| | தாராபுரம் | 3203 |
| | காங்கேயம் | 3204 |
| | மடத்துக்குளம் | 3205 |
| | பல்லடம் | 3206 |
| | உடுமலைப்பேட்டை | 3207 |
| வேலூர் | வேலூர் | 2701 |
| | ஆம்பூர் | 2702 |
| | அரக்கோணம் | 2703 |
| | ஆற்காடு | 2704 |
| | குடியாத்தம் | 2705 |
| | காட்பாடி | 2706 |
| | திருப்பத்தூர் | 2707 |
| | வாணியம்பாடி | 2708 |
| | வாலாஜாபேட்டை | 2709 |
| | வாலாஜா | 2710 |
| விழுப்புரம் | விழுப்புரம் | 2801 |
| | செஞ்சி | 2802 |
| | கள்ளக்குறிச்சி | 2803 |

| | திருவெறும்பூர் | 2507 |
|---|---|---|
| **மாவட்டம்** | **மையம்** | **குறியீட்டு எண்** |
| விழுப்புரம் | திண்டிவனம் | 2805 |
| | திருக்கோவிலூர் | 2806 |
| | உளுந்தூர்பேட்டை | 2807 |
| | வானூர் | 2808 |
| விருதுநகர் | விருதுநகர் | 2901 |
| | அருப்புக்கோட்டை | 2902 |
| | கரியப்பட்டி | 2903 |
| | இராஜப்பாளையம் | 2904 |
| | சாத்தூர் | 2905 |
| | சிவகாசி | 2906 |
| | ஸ்ரீவில்லிபுத்தூர் | 2907 |
| | திருச்சுழி | 2908 |

| | | |
|---|---|---|
| | சங்கராபுரம் | 2804 |